Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 279
வியாழக்கிழமை
01 செப்ரெம்பர் 2022
ஆவணி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 12
விலை : ரூ.50

## நாடு முழுவதும் பேரிடர் வெள்ளம், மண்சரிவு

*மீட்புபணிக்கு வான்படை தயார் நிலையில்*

கொழும்பு, செப். 1
நாடு முழுவதும் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கன மழை காரணமாக 11

# இலங்கைக்கு காலஅவகாசம் போதும் பாதுகாப்புச் சபைக்கு பாரப்படுத்துக

- சீனா தடுக்கும் என்பது நொண்டிச்சாட்டு
- தீர்க்கமான முடிவு எடுக்க வலியுறுத்தி இணைஅனுசரணை நாடுகளுக்கு தமிழ்த் தரப்புக்கள் கூட்டாக காட்டமான கடிதம்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 1
இலங்கைக்கு இனியும் கால அவகாசம் வழங்கிக் கொண்டிருக்காது, ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு பாரப்படுத்தவேண்டும். இதனை சீனா தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுக்கும் என்பது நொண்டிச்சாட்டு – இவ்வாறு ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை முன்வைக்கவுள்ள இணை அனுசரணை நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்குத் தமிழ்த் தரப்புக்கள் ஒன்றிணைந்து கடிதம் அனுப்பியுள்ளன. 11



# 15இல் மலர்கிறது 'தாமரைக் கோபுரம்'

கொழும்பு, செப். 1
தெற்காசியாவின் மிக உயர்ந்த கட்டமான 'தாமரைக் கோபுரத்தின்' செயற்பாடுகள் செப்ரெம்பர் 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரி 12

## ஜெனிவா நெருக்கடிகளிலிருந்து அரசாங்கத்தை காப்பாற்றுவோம்

*எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி*



கொழும்பு, செப். 1
ஜெனிவாவில் இலங்கைக்குக் காத்திருக்கும் நெருக்கடிகள் தொடர்பில் நாம் அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் சார்பாகவே செயற்படுவோம். - இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் 11

## முச்சந்தி முரளி

"ஜெனிவா எண்டவுடன தான் ஆட்டாட்டியும் ரணிலுக்காக சஜித்திஸ்ர சதை ஆடுது கண்டியளோ..."



## திருமலை முதல் இந்தியா வரை எரிசக்தி குழாய் அமையும்?

*ஆராய்வுகள் இடம்பெறுவதாக மிலிந்த மொரகொட தெரிவிப்பு*

புதுடில்லி, செப். 1
திருகோணமலையில் அமைந்துள்ள எண்ணெய் குதங்களுக்கும், இந்தியாவுக்கும் இடையே எரிசக்தி குழாய் அமைப்பது குறித்து இரு நாடுகளும் விவாதித்து வருவதாக, இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் 09

## 2 பில்லியன் டொலர் இலங்கைக்கு வரும்

கொழும்பு, செப். 1
இலங்கைக்கு 2 பில்லியன் டொலர் அவசர நிதியை, உதவியாக வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதி வழங்கியுள்ளது. இலங்கைக்கான ஆசிய அபிவி 12

## இரண்டாம் தவணை விடுமுறை சுருங்கியது

கொழும்பு, செப். 1
அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளுக்கு அடுத்த வாரம் இரண்டாம் தவணை விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு 12



# புலிகளின் தாங்கி நேற்று மீட்பு

*எண்ணெயைக் காணோம்*

முல்லைத்தீவு, செப். 1
தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட எரிபொருள் தாங்கி நேற்று மீட்கப்பட்டது. அதனுள் எண்ணெய் 12



## காகத்தின் கூட்டில் குயிலின் முட்டை

*ரணிலின் இடைக்கால பட்ஜெட்டை இப்படி விமர்சிக்கிறார் ஹர்ஷ டி சில்வா*

கொழும்பு, செப். 1
காகத்தின் கூட்டில் வளர்க்கப்பட்ட குயிலைப் போன்ற யோசனையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள பட்ஜெட் யோசனையா கும் - இவ்வாறு 12

## பயங்கரவாதத் தடைச்சட்டம் பிரயோகிக்கப்படவே மாட்டாது

*பேரவை அமர்வு நெருங்கும் நிலையில் தாளத்தை மாற்றுகிறது அரசாங்கம்*

கொழும்பு, செப். 1
அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்கள்மீது பயங்கரவாதத்தடைச்சட்டம்பிரயோகிக்கப்பட மாட்டாது என அரசாங்கம் நாடாளுமன்றத்தில் நேற்று உறுதியளித்துள்ளது.
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் தினேஷ் 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இணையனுசரணை நாடுகளுடன் பேச்சுக்கு அரசாங்கம் தயார்!

## நீதியமைச்சர் விஜேதாச தெரிவிப்பு



**கொழும்பு, செப். 1**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் இணை அனுசரணை நாடுகள் புதிய தீர்மானத்தைக் கொண்டுவருமேயானால், அது தொடர்பாக எமக்கு எவ்வித கோபமும் இல்லை. மாறாக அவர்கள் முன்வைக்கக்கூடிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் ஒரே மேசையில் அமர்ந்து பேச்சு நடத்துவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் - இவ்வாறு நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

நீதியமைச்சும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகமும் ஒன்றிணைந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள நீதியமைச்சின் கேட்போர் கூடத்தில் செய்தியாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தன. அதில் ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே நீதியமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இணை அனுசரணை நாடுகள் என்பவை பெரும்பாலும் புலம்பெயர் தமிழர்களின் ஆதிக்கம் மேலோங்கிய நாடுகளாகவே உள்ளன. இருப்பினும் நல்லிணக்கத்தை நோக்கி நாம் முன்னெடுத்து வரும் நியாயமான நடவடிக்கைகளை அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகின்றோம் என்றும் நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரில் இணை அனுசரணைநாடுகள் இலங்கை தொடர்பில் புதிய தீர்மானமொன்றை முன்வைப்பதற்கு ஆயத்தமாகி வருகின்றன என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இதற்கு முகங்கொடுப்பதற்கு இலங்கை தயார்நிலையில் உள்ளதா? என்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்கிய நீதி அமைச்சர், இந்த இணை அனுசரணை நாடுகள் பெரும்பாலும் புலம்பெயர் தமிழர்கள் சார்ந்திருக்கும் நாடுகளாகவே இருக்கின்றன. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் சிறந்த நிலையிலிருப்பது தொடர்பாக நாம் மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால் நல்லிணக்கத்தை நோக்கி நாம் முன்னெடுத்து வரும் செயற்திறன்மிக்க நடவடிக்கைகளை அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல்கைதிகள் விவகாரம், காணி விடுவிப்பு விவகாரம் ஆகியவற்றில் நாம் குறிப்பிடத்தக்கவிலான முன்னேற்றத்தை எட்டியிருப்பதுடன் இந்தப் பிரச்சினைகளுக்கு உரியவாறான தீர்வை வழங்கவேண்டுமென்ற நியாயமான நோக்கத்துடன் செயலாற்றி வருகின்றோம் - என்றார். (எ-இ)

# சர்வதேசத்தின் குரல்களை புறக்கணிக்கின்றார் ரணில்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடும் குற்றச்சாட்டு



கொழும்பு, செப்.1

கொடூரமான பயங்கரவாத தடுப்புச் சட்டங்களைப் பயன்படுத்தி, அமைதியான போராட்டக்காரர்களை இலக்கு வைப்பதை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக நிறுத்தவேண்டும். தடுப்புக் காவலில் உள்ளவர்கள் விடுவிக்கப்படவேண்டும். சர்வதேசத்தின் குரல்களை புறக்கணிப்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முனைப்புடன் இருக்கின்றார் என்று தெரிகின்றது இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதியாகப் பதவியேற்றதிலிருந்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்து சுதந்திரம் மற்றும் அமைதியான ஒன்றுகூடல் உள்ளிட்ட உரிமைகளை நசுக்கியுள்ளார். அவரது நிர்வாகம் ஒரு மாத அவசரகால நிலைமையை விதித்தது, ஆர்ப்பாட்டக்காரர்களை வன்முறை மூலம் கலைப்பதற்கு பாதுகாப்புப் படைகளைப் பயன்படுத்தியது, அமைதியான போராட்டங்களில் பங்கேற்ற பல பொதுமக்களைக் கைது செய்தது.

அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் பயன்பாட்டை இடைநிறுத்துவோம் என்றும், உரிமைகளை மதிக்கும் சட்டத்தை அதற்குப் பதிலாக மாற்றுவோம் என்றும் அளித்த வாக்குறுதிகளை மீறியுள்ளன. சீர்திருத்தத்துக்கு அழைப்பு விடுக்கும் மக்களை முடக்குவதற்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை ஜனாதிபதி ரணில் பயன்படுத்தியிருப்பது, அவரது நிர்வாகத்தில் உரிமைகளுக்கு முன்னுரிமை கிடைக்காது என்ற செய்தியையே இலங்கையர்களுக்கு அனுப்புகிறது - என்றுள்ளது. (எ-இ)

# காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் நம்பத்தகுந்த பொறிமுறை தேவை

## சந்தியா எக்னலிகொட வலியுறுத்து

கொழும்பு, செப்.1

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளுக்காக நம்பத்தகுந்த பொறிமுறையொன்றை உருவாக்கும் சவால் ஜனாதிபதியின் முன்பாக உள்ளது என சந்தியா எக்னலிகொட தெரிவித்துள்ளார்.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான சர்வதேச தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட ஊடகச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான இலங்கையின் பொறிமுறைகள் தொடர்பில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும், ஐ.நாவும் நம்பிக்கை இழக்கத் தொடங்கிவிட்டன.

உலகளாவிய ரீதியில் ஆயிரக்கணக்கானவர்கள் ஆயுத மோதல்கள் காரணமாகவும் அரசியல்வன்முறைகள் காரணமாகவும் கொல்லப்பட்டுள்ளனர், காணாமல்போயுள்ளனர். அவர்களுக்கு இறுதி மரியாதைகூட செலுத்தப்படவில்லை. இதேபோன்று இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல்போயுள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் ஏற்படுத்தப்பட்ட போதும், கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகி தனக்கு நெருக்கமானவர்களை நியமித்ததைத் தொடர்ந்து அந்த அலுவலகம் நம்பிக்கை இழந்துவிட்டது. சர்வதேச சமூகமும் அதன் மீதான நம்பிக்கையை இழந்துவிட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தச் சவாலை ஏற்று பலவந்தமாக காணாமல்போகச் செய்தலால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களுக்கு நீதியை வழங்க முன்வரவேண்டும். முக்கியமாக வடக்கு, கிழக்கில் உள்ளவர்களுக்குநீதியை வழங்கவேண்டும். பெண்கள் வாழ்நாள் முழுவதும்நீதிகோரிதங்கள் கணவர், பிள்ளைகளின் படத்தை சுமக்கமுடியாது- என்றார். (எ-இ)

# சர்வகட்சி இல்லாவிடின் தேர்தலே மாற்று வழி!

## மைத்திரி வலியுறுத்து

கொழும்பு, செப். 1

சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படாவிட்டால் அடுத்தபடியாக தேர்தலுக்கு செல்வதே மாற்று வழியாகும் என்று வலியுறுத்தியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைக்கும் நோக்கில் பேச்சுக்கள் நடத்தப்பட்டாலும் அது இதுவரையில் வெற்றியளிக்கவில்லை. சர்வகட்சி அரசாங்கமொன்றுக்கான அடித்தளமாக தேசியப் பேரவையொன்றை நிறுவுவது தொடர்பில் முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கு அமைச்சரவையின் அதிகாரங்கள் குறைந்துவிடும் என்ற காரணத்தால் உரிய பதில் கிடைக்கவில்லை.

சர்வகட்சி அரசாங்கத்தை நிறுவுவதை விடவும் தனிப்பட்ட அதிகாரங்கள் மற்றும் நலன்களை அடிப்படையாகக் கொண்டு சில அரசியல்வாதிகள் செயற்பட்டு வருகின்றார்கள். இவ்வாறான நிலையில் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படாவிட்டால் தேர்தலுக்கு செல்வதே மாற்று வழி என்பது தெளிவானது - என்றார். (ம-14,இ)

# பௌத்த வழிபாட்டுக்கு தடை ரவிகரன் மீது முறைப்பாடு!

முல்லைத்தீவு, செப். 1

முல்லைத்தீவு, குருந்தூர் மலையில் பௌத்த வழிபாடுகளை மேற்கொள்வதற்குத் தடையாக உள்ளார் என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் மீது பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பலதடவைகள் தாம் குருந்தூர் மலையில் பௌத்த வழிபாடுகளை மேற்கொள்ள எடுத்த முயற்சிகளுக்கு து.ரவிகரன் இடையூறாக இருந்தார் என்று பௌத்த பிக்குகள் சிலர் முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

து.ரவிகரனை தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்ட பொலிஸார், இது தொடர்பான விசாரணைக்காக நாளை பொலிஸ் நிலையம் வரவேண்டும் என்று அறிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-246)

# தேர்தலை ஒத்திவைத்தால் சட்ட நடவடிக்கை

## எச்சரிக்கின்றார் பீரிஸ்

கொழும்பு, செப். 1

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்க முயற்சித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அரசாங்கத்தை எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ள அவர், மாகாணசபைத் தேர்தலைப் போன்று உள்ளூராட்சி தேர்தலையும் ஒத்திவைக்க வேண்டாம் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

முன்னதாக வாக்குறுதியளித்தபடி விரைவில் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும். அரசமைப்பின்படி மக்களுக்கு இறையாண்மை உள்ளது. மக்களின் தேர்தல் உரிமையை யாராலும் நசுக்க முடியாது. ஜனநாயக அமைப்பின் அடிப்படையாக இருந்த வாக்காளர்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சமூக ஒப்பந்தம் பலவீனமடைந்து ஆபத்தில் உள்ளது. அரசாங்கம்மக்களின்ஆணைக்கு முரணாக செயற்படுகின்றது. பொதுஜன பெரமுன மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளும் செயற்பாடுகளும் முரணாக உள்ளன. பொதுஜன பெரமுனவின் அபிலாஷைகள் தற்போது முற்றாக சிதைந்துவிட்டன - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# தேடல் முடிவிலியா?

சிறிலங்காவில் காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளைத் தேடி தசாப்த காலத்துக்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்களுக்கு எவ்விதத் தீர்வுகளும் வழங்கப்படாத நிலையில், மற்றுமொரு சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் நேற்று முன் தினம் ( ஓகஸ்ட் 30) கடந்திருக்கின்றது.

சிறிலங்காவில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 13 ஆண்டுகள் கடந்திருக்கும் நிலையில், இராணுவத்தினரிடம் ஒப்படைத்த தங்கள் உறவுகளை – இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் சொந்தங்களை– தேடுவோரின் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. 2 ஆயிரம் நாள்களுக்கும் மேலாக வெயிலிலும் மழையிலும் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தப் போராட்டங்கள் அதிகாரத்தில் இருப்பவர்களையோ, சர்வதேசத்தையோ கிஞ்சித்தும் அசைக்கவில்லை.

சிறிலங்கா அரசாங்கம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரத்தைப் பூசி மெழுகி முடித்துவிடவே முயல்கின்றது. சர்வதேச நாடுகள் இந்த விடயத்தில் தலையிட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாக இருந்தாலும், சர்வதேச நாடுகளும் தமிழர் விவகாரத்தை சிறிலங்காவுக்கான கடிவாளமாகப் பயன்படுத்தி குளிர்காய முயல்கின்றனவே தவிர தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று இதயசுத்தியுடன் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரமும் உள்ளடங்கியிருந்தபோதும், தீர்மானங்களை ஏற்றுக்கொண்ட சிறிலங்கா அதை நடைமுறைப்படுத்த முயலவில்லை அல்லது நடைமுறைப்படுத்துவது போன்ற பாவனையே காட்டியது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானத்தைக் கொண்டு வந்த நாடுகளும் சரி, அதற்கு ஆதரவு வழங்கிய நாடுகளும் சரி சிறிலங்காவுக்கான அழுத்தங்களை மட்டுப்படுத்தியே வைத்திருக்கின்றன.


காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, அரசியல் கைதிகள் விவகாரம் போன்ற பிரச்சினைகளில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளின் செயற்பாடுகளும் திருப்தி கொள்ளும் படியாக இல்லை. இந்தப் பிரச்சினைகளை முன் கொண்டு செல்வதற்கான கட்டமைப்புக்களோ படிமுறைகளோ கடந்த தசாப்த காலத்தில் உருவாக்கப்படாதமை தமிழ்த்தலைமைகளின் தவறே. நடத்தப்படும் போராட்டங்களில் கலந்துகொண்டால் போதுமானது என்ற மனப்போக்கிலேயே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் செயற்படுகின்றனர். ஆனால், அவை இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத்தருமா? என்பது பெரும் சந்தேகமே.

காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளை தசாப்த காலத்துக்கும் மேலாக தேடியலைவோரில் பெரும்பாலானோர் வயதால் மூப்படைந்த பெற்றோரே. இவர்கள் மன, உடல் ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்வதற்கான போராட்டங்களை மேற்கொண்டிருப்பவர்களில் நூற்றுக்கும் அதிகமானவர்கள், தங்கள் உறவுகளின் கதியை அறியாமலேயே மரணித்திருக்கின்றனர். அவர்களின் மறைவுடன் அவர்களின் தேடலும், அவர்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற கேள்வியும் மறைந்து விடுகின்றது.

காலங்கள் இழுத்தடிக்கப்பட்டால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதி மண்ணோடு மண்ணாக மறைந்துவிடும். சிறிலங்கா அரசாங்கமும் அதையே எதிர்பார்க்கின்றது. இனியும் காலம் தாழ்த்தாது வழமை போன்று அறிக்கைகள்,கடிதங்கள், உரைகளோடு நின்றுவிடாது விரைவாக நீதியைப் பெறுவதற்கான வழிமுறைகளை தமிழ் அரசியல் தலைமைகளும், ஏனையோரும் சிந்திப்பது அவசியம். சிறிலங்கா இப்போதுள்ள நிலைமையைப் பயன்படுத்தி நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளைத் தேட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.

நாளொரு நல்வார்த்தை

“நீங்கள் அனைவரையும் உங்கள் எதிரிகளாகப் பார்த்தால் உங்களை சுற்றியுள்ள அனைவரும் உங்களுக்கு எதிரிகளாகத்தான் இருப்பார்கள்” - ஜாக் மா




# தமிழர்களினது சாபம்தான் கோத்தாவை துரத்துகிறது!

## வினோ எம்.பி. தெரிவிப்பு

**முல்லைத்தீவு, செப். 1**

**இறுதிப்போர் இடம்பெற்றபோது, அப்போதைய பாதுகாப்புச் செயலராக இருந்தவர் இன்று சொந்த நாட்டில் வாழமுடியாமல், நாடுவிட்டு நாடு சென்று குறுகியகால தங்கலில் இருக்கின்றார். எங்கள் மக்களின் சாபம் அவரை விட்டுவைக்கவில்லை என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான வினோநோகராதலிங்கம்.**

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி முல்லைத்தீவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர் முடிவடைந்து இத்தனை வருடங்களாகியும் இன்னமும் காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரத்துக்கு தெளிவான முடிவொன்றை அரசாங்கம் வழங்கவில்லை. காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடி மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டம் தொடர்ந்துகொண்டேதான் இருக்கின்றது. காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரத்துக்கு தீர்வை எட்டுவதற்காக அமைக்கப்பட்ட ஓ.எம்.பி. அலுவலகத்தை போராட்டத்தில் ஈடுபடும் உறவுகள் ஏற்க மறுத்துள்ளனர். சர்வதேசத் தலையீடும் சர்வதேசப்பொறிமுறையும்தான் இந்த விவகாரத்துக்கு ஒரு தீர்வைத்தரும். காணாமலாக்கப்பட்ட தமது பிள்ளைகளைத் தேடிய பல தாய்மார்கள் உயிரிழந்துவிட்டனர். இது ஒரு வகையில் திட்டமிட்ட கொலைதான். அதைத்தான் இந்த அரசாங்கம் செய்கின்றது - என்றார். (ம-19)

# கோத்தாவுக்கு அடைக்கலம்: சிங்கள தேசம் தயார்நிலை!

## முன்னாள் எம்.பி. சிவமோகன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, செப். 1

கோத்தாபயவுக்கு அடைக்கலம் கொடுப்பதற்கு, சிங்கள தேசம் மீண்டும் தயாராகிக் கொண்டிருக்கின்றது என்று தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மருத்துவருமான கலாநிதி சி.சிவமோகன்.

முல்லைத்தீவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காணாமலாக்கப்பட்டவர்களுக்கான போராட்டத்தில் கலந்துகொண்ட சிவமோகன், மேலும் தெரிவித்ததாவது:-

இனப்படுகொலையாளியான கோத்தாபயவுக்கு மகுடம் சூட்டும் நடவடிக்கையில் சிங்கள தேசம் மீண்டும் களமிறங்கியுள்ளது. நாம் சர்வதேசத்திடம் கோருவது என்னவென்றால், தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைகளைக் கட்டவிழ்த்துவிட்ட அனைவரும் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும். அது மேற்கொள்ளப்படாத பட்சத்தில் சுமுகமான உறவொன்று இந்த நாட்டில் ஏற்பட வாய்ப்பில்லை - என்றார். (ம-19)

நாளை

02.09.2022
வெள்ளிக்கிழமை
ஆவணி 17

சுபநேரம் : 06.05 - 07.35
ராகுகாலம்: 10.35 - 12.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு வேண்டும்!

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் ஜேசுதாசன் கோரிக்கை




**யாழ்ப்பாணம், செப். 1**

**வடக்கு மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உடனடி நடவடிக்கை எடுப்பதோடு, நாட்டைப் பொருளாதார ரீதியாக முன்னேற்றவும் தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைவிடுத்து, ஆட்சி மாற்றத்துக்காக போராடியவர்களைக் கைது செய்வதைக் கைவிட வேண்டும் -இவ்வாறு தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் ஜேசுதாசன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளைஞர்கள் ஜனநாயக ரீதியாகப் போராடி, கொடுங்கோல் ஆட்சியை மாற்றி புதிய ஜனாதிபதியைக் கொண்டுவந்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். ஆனால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மஹிந்த ராஜபக்ச ஆட்சியினுடைய நிழல் ஆட்சியை செய்துகொண்டிருக்கிறாரா? என்ற கேள்வி அனைவரிடத்திலும் எழுந்துள்ளது.

ஜனநாயகம் தொடர்பில் பேசப்படும்போது போராட்டக்காரர்களைக் கைது செய்தல் செயற்பாடு தொடர்ந்து இடம்பெறுகின்றது.

இந்த நிலையில் வடமாகாண கடற்றொழிலாளர் இணையமும், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் இணைந்து மீனவர்களை பாதிக்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஊடகம் வாயிலாக ஆட்சியாளர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக மீனவ சமூகங்களின் கோரிக்கைகளை முன்வைப்பதற்குக் கலந்துரையாடியுள்ளோம்.

அத்தோடு இந்திய இழுவைமடிப் பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு வடக்கு மீனவர்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே வடக்கு மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் -என்றார். (ம-14-20-27)

# கிளி.நகரசபை எல்லைகளை மீள் பரிசீலனை செய்யுங்கள்

## சமத்துவக்கட்சி செயலாளர் மு.சந்திரகுமார் கோரிக்கை

கிளிநொச்சி, செப். 1

கிளிநொச்சி நகரசபையின் எல்லைகளை மீள்பரிசீலனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று சமத்துவக்கட்சியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு சமத்துவக் கட்சியின் செயலாளரால் நேற்றுமுன்தினம் அனுப்பப்பட்ட கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

கடிதத்தில் மேலும் உள்ளதாவது,

மக்கள் தொகை செறிவாகவும், நகர கட்டமைப்பொன்றுக்குத் தேவையான அனைத்து அம்சங்களை தன்னகத்தே வைத்திருந்தும் நீண்டகாலமாக பிரதேசசபை என்ற தகுதி நிலையில் நிர்வகிக்கப்படும் கிளிநொச்சி நகரை, நகரசபை என்ற படிநிலைக்கு தரம் உயர்த்துவதற்குரிய முன்மொழிவுகள் தங்களது அரசால் வெளியிடப்பட்டிருப்பதை கிளிநொச்சி நகர மக்களின் சார்பில் பேருவகையுடன் வரவேற்கிறோம்.

பிரதேசசபையை தரமுயர்த்தும் செயற்பாடு, நீடித்ததும் நிலையானதுமான அபிவிருத்தியை நோக்கி கிளிநொச்சி நகரை முன்னகர்த்தும் என்ற திடமான நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

எனினும்,உள்ளூராட்சி அமைப்பொன்றைத் தரமுயர்த்துவது தொடர்பாக கருத்தில் எடுக்கப்பட்டிருக்க வேண்டிய விடயங்கள் அனைத்தும் கிளிநொச்சியை நகரசபையாக்கும் விடயத்தில் எச்சரிக்கையோடு தவிர்க்கப்பட்டிருப்பதோடு, ஒருசில தனிநபர்களின் அரசியல் அபிலாஷைகள் மட்டுமே முன்னிறுத்தப்பட்டிருப்பதும் வேதனையான விடயமாகும்.

எனவே, குறுகிய அரசியல் நலன்களை மட்டுமே முன்னிறுத்தி, மக்கள் மத்தியில் நிரந்தரமான பிரிவை உருவாக்கக்கூடிய, எவருடனும் கலந்தாலோசிக்கப்படாத நகர சபை உருவாக்கும் முயற்சியை மறுபரிசீலனை செய்து, சரியானதும் பொருத்தமானதுமான பொறிமுறையொன்றின் கீழ் கிளிநொச்சியை நகர சபையாக்குவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தங்களை பணிவுடன் வேண்டி நிற்கிறோம் -என்றுள்ளது. (ம-14-214)



மல்லாவி வவுனிக்குளத்தினுள் மீன்குஞ்சுகள் விடும் செயற்பாடு, 65ஆவது காலாட் படைப்பிரிவின் ஆலங்குளம் இராணுவத்தினரால் கடந்த திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ம-14-19)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம், செப். 1

நல்லூர் வடக்கு சிறி சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலில் ஆவணி சதுர்த்தி திருவிழா நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது. அத்துடன், ஆலயத்தின் மஹோற்சவத்தையொட்டி நடத்தப்பட்ட சைவசமய அறிவுசார் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ய)

தருமபுரம் கிழக்கு அபிவிருத்திச் சங்கம் , கமக்கார அமைப்புக்களின்

# நிர்வாகத்தை புதுப்பிக்குக; பொதுமக்கள் கோரிக்கை!

கிளிநொச்சி, செப். 1

கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தருமபுரம் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் கமக்கார அமைப்பு ஆகியவற்றின் நிர்வாகம் பல வருடங்களாகியும் சீரமைக்கப்படவில்லை என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் கமக்கார அமைப்பின் நிர்வாகம் வினைத்திறனற்று காணப்படுகின்றது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக்கொண்டு சென்றும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். அமைப்புகளின் யாப்பு விதிகளின் பிரகாரம் ஓர் அமைப்பின் ஆயுட்காலம் இரண்டு வருடங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், தருமபுரம் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் கமக்கார அமைப்புக்கள் பல ஆண்டுகளாக ஒரே நிர்வாகத்துடன் இயங்கி வருகின்றன.

எனவே விரைந்து பொதுக் கூட்டங்களை நடத்தி இரண்டு அமைப்புக்களுக்கும் புதிய நிர்வாகங்களைத் தெரிவுசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14-214)

## மஹோற்சவம்

கொடிகாமம், செப். 1

நாவற்குழி அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 11 நாள்கள் மஹோற்சவம் நடைபெறும். (ய-159)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 1

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோயிலில் நடைபெறும் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு ஆலயசண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. சிறப்புச்சொற்பொழிவை இளம்சைவப்புலவர் நித்தியபாபுதரன் 'இலங்கையில் முருக வழிபாட்டின் தொன்மை' என்னும் தொனிப்பொருளில் ஆற்றவுள்ளார். (ய)

* * *

இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக, யாழ். மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்று வருகின்றது.

36ஆவது தொடர் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு கரவெட்டி கிழக்கு இலம்போதரன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் சொற்பொழிவினை சைவப்புலவர் செ.கந்த. சத்தியதாசன் 'நாவலரே நமக்கான அடையாளம்' என்னும் தொனிப்பொருளில் ஆற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது. (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப். பணியாளர் மட்ட உடன்படிக்கை எட்டப்பட்டது

### உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று வெளியாகும் என்று தகவல்

கொழும்பு, செப். 1

**இலங்கை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில், அவசரகால கடன் வழங்குவதற்கான பணியாளர் மட்ட உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது என்று சர்வதேச ஊடகமான ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.**

நேரடியாக தொடர்புடைய நான்கு வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன என்று அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை தொடர்பான முறையான அறிவிப்பு இன்று வியாழக்கிழமை வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக மோசமான பொருளாதார நெருக்கடியுடன் போராடும் இலங்கை, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 3 பில்லியன் டொலர்வரை கோரியுள்ளது.

இந்த நிலையில் கடன் இணக்கம் தொடர்பில் இலங்கை அதிகாரிகள் உடனடியாக பதிலளிக்கவில்லை என்று ரொய்ட்டர்ஸ் குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு வந்துள்ள, சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள், திறைசேரியின் செயலாளர் உட்பட இலங்கை அரசாங்க அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவுவரை பேச்சுக்களை நடத்தினர் என்று தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுகள் முன்னேற்றம் கண்டுள்ளன என்று நேற்றுமுன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். (எ-இ)

## ஐ.எம்.எப். பேச்சுக்கள் மேலும் ஒருநாள் நீடிப்பு

கொழும்பு, செப். 1

இலங்கை அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை மேலும் ஒருநாள் நீடிக்கப்பட்டுள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுக்கள் தொடர்வதால் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளின் இலங்கைப் பயணம் மேலும் ஒருநாள் நீடிக்கப்பட்டுள்ளது என சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் முதலாம் திகதி பேச்சுக்களைப் பூர்த்தி செய்து அறிக்கையை வெளியிடவுள்ளோம் என சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## மக்களின் கேள்விக்கு பதில் வழங்கப் பொறிமுறை

### சிறப்புச் சுற்றறிக்கை வெளியீடு

கொழும்பு, செப். 1

அரச நிறுவனங்களுக்கு பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கடிதங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கான பதில்களை வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்ன தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்று இடர் மற்றும் அதனைத் தொடர்ந்து நாடு எதிர்கொண்ட எரிபொருள் நெருக்கடி காரணமாக பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கடிதங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கு அரசாங்க நிறுவனங்கள் பதிலளிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

மக்கள் தமது பிரச்சினைகளை முன்வைத்து அனுப்பும் கடிதங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்குப் பதில் வழங்குவது அரச அதிகாரிகளின் கடமை. இந்தநிலையில் இவற்றை நிவர்த்திக்க சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டு அதுதொடர்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது- என்றார். (ச-இ)

## ராஜபக்சக்களின் ஊழல்களே நிதிப் பேரிடருக்குக் காரணம்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, செப். 1

இலங்கை எதிர்கொண்டுள்ள நிதிப் பேரிடர் நிலைமை இரண்டு ராஜபக்சக்களின் ஆட்சியில் இடம்பெற்ற ஊழல்களின் விளைவே. ராஜபக்சக்களை ஆட்சியில் இருந்து அகற்றிய மக்கள் போராட்டம் மெய்சிலிர்க்க வைத்தது- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எங்கள் அமைப்புமுறை வீழ்ச்சியடைந்துள்ளபோது, வேண்டுமென்றே அழிக்கப்பட்டுள்ள போது நீங்கள் எப்படி நிலைமையை மாற்றுவீர்கள்? சமூக அரசியல் எழுச்சியால் மாத்திரமே அதை மாற்றமுடியும். புரட்சியே வழி.

இரண்டு ராஜபக்சக்களின் ஆட்சி காரணமாக நாடு அந்த நிலையை அடைந்திருந்தது. மோசமான வெறுக்கத்தக்க அனைத்தும் அதிகாரத்தில் பலப்படுத்தப்பட்டிருந்தது. ராஜபக்ச குடும்பம் மற்றும் அவர்களது கூட்டாளிகளால்தான் நாம் இன்று வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டோம்.

ராஜபக்ச அரசாங்கம் ஒரு நாட்டை நோக்கி அதிகமாக நகர்ந்தது. ஆனால் அணிசேரா மாதிரியை இலங்கை பின்பற்றவேண்டும். ராஜபக்ச அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் இந்தியா விலகியிருந்து, காத்திருக்கக்கூடிய நிலை காணப்பட்டது. தற்போது இந்தியா எமக்கு உதவ முன்வந்தமை, உதவிகளை வழங்கியமை தொடர்பாக நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ராஜபக்சக்கள் மீண்டும் வருவதற்கான சாத்தியக்கூறுகள் நிச்சயமாக உள்ளன. ரணிலின் ஆட்சியில் பதவி வகிக்கும் அதிகாரிகளும் நம்பிக்கைக்குரிய அதிகாரிகளும் நாட்டின் தேசிய விவகாரங்களுக்குத் தீர்வைக் கண்டால் வரலாற்றின் கடந்த காலம் ராஜபக்சக்களை உரிய இடத்தில் வைக்கும்- என்றார். (எ-இ)

## துர்க்கை அம்மனின் தங்கரதத் திருவிழா

யாழ்ப்பாணம், செப். 1

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் பெருந்திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வரும் நிலையில், இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு துர்க்கை அம்பாள் தங்கரதத்தில் பவனிவரும் காட்சி இடம்பெறவுள்ளது என்று துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அறிவித்துள்ளார்.

அத்துடன் விசேட திருவிழாக்களின்போது இரவு 7.30 மணிவரை விசேட பேருந்து சேவை இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

## போஷாக்குக் குறைபாடு குழந்தைகளில் தீவிரம்!

கொழும்பு, செப். 1

கொரோனாத்தொற்று ஆரம்பமாகியது முதல் கடந்த இரண்டு ஆண்டுகளில் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்ட பல குழந்தைகள் எடை குறைந்த குழந்தைகள் என அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கொழும்பு ரிஜ்வே சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மருத்துவமனைக்கு வந்த பெரும்பாலான குழந்தைகளில் வயதுக்கு ஏற்ற எடை இல்லை. உயரத்துக்கு ஏற்ற எடை இல்லை. குழந்தைகளின் ஊட்டச்சத்து குறித்து பெற்றோருக்குப் போதிய விழிப்புணர்வு இல்லாததும் இதற்குக் காரணம் - என்றார். (ம-14.இ)

# இடைக்கால பட்ஜெட்டில் சஜித்துக்கு திருப்தியில்லை

இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளில் திருப்தியடைய முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு-செலவு திட்ட அறிக்கை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரவு-செலவுத் திட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள தகவலில் இணங்க முடியாது. யுனிசெப் அறிக்கையில் தாய்மார், பிள்ளைகள் எந்தளவுக்குப் பாதுகாப்பற்ற முறையில் இருக்கின்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தப் புள்ளிவிவரத்தை ஒதுக்கிவிட்டு, 61 ஆயிரம் குடும்பங்கள் வறுமையிலேயே தற்போதைய நெருக்கடி நிலைமையில் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் மற்றும் புள்ளிவிவரங்கள் தொடர்பில் பெரும் பிரச்சினைகள் உள்ளன.

பொருளாதார நெருக்கடியால் நாட்டில் பெருமளவானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலைமையில் அரசாங்கத்தை செயற்படுத்திச் செல்ல வேண்டுமாயின் மக்களின் நலன்புரிகள் மற்றும் அபிவிருத்திகளுக்காக இதற்கும் மேலான நிதியை ஒதுக்க வேண்டும். அவ்வாறான எதுவும் இதில் இல்லை. அதனால் இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் திருப்தியடைய முடியாதுள்ளது- என்றார். (ம-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்குளியில் துப்பாக்கிச்சூடு ஒருவர் சாவு!

கொழும்பு, செப்.1
மட்டக்குளி, அலிவத்த பிரதேசத்தில் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.
சம்பவத்தில் அதேபகுதியைச் 26 வயதான ஹசித சதுரங்க என்பவர் உயிரிழந்துள்ளார்.
போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு இடையில் ஏற்பட்ட தகராறே துப்பாக்கிச் சூட்டுக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# 1,71,497பேர் பல்கலைக்கு தகுதி

கொழும்பு, செப்.1
2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கமைய, ஒரு இலட்சத்து 71 ஆயிரத்து 497 பேர் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.
மருத்துவப் பீடத்துக்கு 2 ஆயிரத்து 35 பேரும், பொறியியல் பீடத்துக்கு 2 ஆயிரத்து 238 பேரும் விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர். (எ-இ)

# வேலை வாய்ப்பு என பல்வேறு மோசடிகள்


கொழும்பு, செப்.1
சுற்றுலா விசாவில் மலேசியா சென்று அந்த நாட்டில் வேலை விசாவாக மாற்ற முடியும் எனக் கூறி பலவிதமான மோசடிகள் இடம்பெற்று வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
இந்தநிலையில் சுற்றுலா விசா நடவடிக்கையில் ஈடுபடும் ஆள்கடத்தல் கும்பலை கைதுசெய்ய குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (எ-14-இ)

# ஐ.எம்.எப். நிபந்தனைகளை தவிர்த்துக்கொள்ள இயலாது

*அலி சப்ரி விளக்கம்*

**கொழும்பு, செப்.1**
**சர்வதேச நாணய நிதியம் பலவந்தமான முறையில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வரவில்லை. எமது தேவைக்காக அவர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளும்போது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செயற்படுத்த வேண்டும்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;- மின்கட்டண அதிகரிப்புக்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.
உற்பத்திச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்துள்ள நிலையில் பல்வேறு சேவை கட்டணங்கள் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளன.
மக்களின் வரிப்பணத்தின் ஊடாகவே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண வேண்டியுள்ளது.
வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் வறுமைக் கோட்டில் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் யோசனைகளை சர்வதேச நிறுவனங்கள் நிபந்தனைகளுடன் முன்வைத்துள்ளன.
சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் தேவை இலங்கைக்கு உள்ளது.
ஆகவே நாணய நிதியம் முன்வைக்கும் நிபந்தனைகளை செயற்படுத்த வேண்டும்.
நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்காமல் தொடர்ந்து நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்குவது நியாயமற்றது -என்றார். (எ-14-இ)



# தரமற்ற மசகு எண்ணெய்; எரிபொருள் உற்பத்தி சரிவு

கொழும்பு, செப்.1
தரமற்ற மசகு எண்ணெய் இறக்குமதி காரணமாக எரிபொருள் உற்பத்தி 22 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.
டுபாயில் பதிவு செய்யப்பட்ட கோரல் எனர்ஜீ எனப்படும் நிறுவனத்திடமிருந்து மசகு எண்ணெய் அல்லது எரிபொருள் கொள்வனவு செய்யவேண்டாம் என பெற்றோலியவள கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும் பரல் ஒன்றுக்கு 15 டொலரும் பீரிமியம் கொடுப்பனவாக 24 டொலரும் செலுத்தி மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது. இந்த நிலையில் இறக்குமதி செய்யப்பட்ட குறித்த மசகு எண்ணெய் தரமற்ற காரணத்தால் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் எரிபொருள் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# தேசபந்து மீது தாக்குதல் மேலும் மூவர் கைது!

கொழும்பு, செப்.1
மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனையும், மேலும் இரு பொலிஸ் அதிகாரிகளையும் கடந்த மே மாதம் 10 ஆம் திகதி கொள்ளுப்பிட்டி பெரஹெர மாவத்தை பகுதியில் வைத்துத் தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் மூவர் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.
இதுதொடர்பில் கொழும்பு குற்றவியல் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-14,இ)

# கைபேசி கொள்வனவு 80 வீதத்தால் வீழ்ச்சி

கொழும்பு, செப். 1
நாட்டில் புதிய கைத்தொலைபேசிகளின் கொள்வனவு 80 வீதத்தால் குறைவடைந்துள்ளது என கையடக்கத் தொலைபேசி இறக்குமதியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
இதுதொடர்பில் சங்கத்தின் தலைவர் தெரிவித்ததாவது:
இறக்குமதிக்கு அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாடு மற்றும் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பின்னணியில் கையடக்கத் தொலைபேசி துறையும் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.
இந்த நிலையில் மக்கள் புதிய கைபேசிக் கொள்வனவைத் தவிர்த்து வருகின்றனர். அதேவேளை கைபேசிகளின் பழுதுவேலை நடவடிக்கை 118 வீதத்தால் அதிகரித்துள்ளது- என்றார். (ச-இ)

# எரிக்கப்பட்ட விடுதி சட்டபூர்வமானதாம்

ரோஹித ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, செப். க
கடந்த மே மாதம் 9ஆம் திகதி நடந்த வன்முறைகளின்போது, சிங்கராஜவனத்துக்கு அருகில் உள்ள ரோஹித ராஜபக்சவின் விடுதியும் தீயிட்டு எரிக்கப்பட்டிருந்த நிலையில், அந்த விடுதி சட்டபூர்வமானது என்று ரோஹித ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அனைத்து சட்டபூர்வ தேவைகளையும் பூர்த்தி செய்த பின்னரே இந்த விடுதி அமைக்கப்பட்டது. ஏதாவது தவறு நடந்திருந்தால் நீதித்துறை நடவடிக்கையை முன்னெடுக்கலாம்.
ஆனால் பொய்க்குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்கள் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும். எனது தரப்பு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-14-இ)

# இலங்கைக்கு பயணம்; ஆலோசனை தளர்வு

கொழும்பு, செப்.1
இலங்கைக்கான பயண ஆலோசனைகளை சுவீடன் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் தளர்த்தியுள்ளன என்று இரு நாடுகளாலும் கடந்த திங்கட்கிழமை மாலை அறிவிப்பு வெளியிடப்பட்டது.
இதேவேளை பிரிட்டன் அரசாங்கம், இலங்கைக்கான பயண ஆலோசனையை கடந்த ஓகஸ்ட் 26 ஆம் திகதியுடன் தளர்த்தியது. நோர்வே, பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளும் இலங்கைக்கான பயண அறிவுறுத்தல்களை தளர்த்தின. கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத்துறை எதிர்பார்த்ததைவிட சிறந்த மீட்சிக்கான அறிகுறிகளைக் காணும் வாய்ப்புகளை இந்தத் தளர்வுகள் மேலும் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-14-இ)

# ஜோன்ஸ்டன் எம்.பி. உட்பட மூன்று பேருக்குப் பிணை!

கையூட்டல் பெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்களுக்கு குற்றப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு, கொழும்பு மேல்நீதிமன்றால் பிணை வழங்கப்பட்டுள்ளது.
2012 ஆம் ஆண்டு சதொச நிறுவன ஊழியர்களை உத்தியோகபூர்வ கடமைகளில் இருந்து நீக்கி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதன் மூலம் அரசாங்கத்துக்கு 11 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்று பிரதிவாதிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட பிரதிவாதிகள் மூவரையும் தலா 50 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், தலா 10 லட்சம் ரூபா அடங்கலான இரண்டு சரீரப் பிணையிலும் செல்ல கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அனுமதித்ததுடன், விசாரணை முடியும் வரை அவர்களுக்கு வெளிநாட்டுப் பயணத்தடையும் விதித்து உத்தரவிட்டார். (எ-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 04 . 1946



மறைவு 29 . 08 . 2022

# சின்னையா கனகலிங்கம்

தெல்லிப்பளை புது தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கனகலிங்கம் கடந்த (29.08.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், ஜெயமலரின் அன்புக் கணவரும், கிருபாகரன் (கனடா), பிரபாகரன் (கனடா), அஜித்தா ஆகியோரின் தந்தையாரும், விக்கினேஸ்வரன் (வடமாகாணசபை), பத்மஜோதி (கனடா), றோகினி (கனடா) ஆகியோரின் மாமனாரும், சோபிகன், மதுஜன் கனடாவைச் சேர்ந்த ஜதுசன், பவிதா, அபிசா, அஸ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கைதடி மத்தி கைதடியில் உள்ள அன்னாரின் மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குமரநகர்,**
**வன்னியசிங்கம் வீதி,**
**கைதடி மத்தி.**

தகவல் :
**குடும்பத்தினர்**

(cs.20578) (2.6)

## மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 10 . 1955



இறப்பு 30 . 08 . 2022

# மயில்வாகனம் மோகனராணி

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும் வவுனியா குட்செட் வீதியை வதிவிடமாகக் கொண்ட மயில்வாகனம் மோகனராணி அவர்கள் நேற்று முன்தினம் (30-08-2022) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற காசிநாதர் - ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும் மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் வசந்தா, பிரபாகரன், கவிதா, விஜிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், குவேந்திரன், டிலானி, கஜனதாஸ் மற்றும் சிவமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற நடராசா பாக்கியத்தின் அன்புச்சகோதரியும், மேகலாயனி, யதுர்ஷிகா, ரேணுகா, டிலக்ஷா, அக்ஷதா, பத்மேஸ், அகர்ஷன், அக்ஷரா ஆகியோரின் அன்பு பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.09.2022) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் இல. 216,மானிப்பாய் வீதி, (வைத்தீஸ்வரா சந்தி) யாழ்ப்பாணம். எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகன கிரிகைக்காக யாழ்.கோம்பயன்மணல் இந்து மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் :
**குடும்பத்தினர்**
**077 222 2083**
**076 697 5307**

**216, மானிப்பாய் வீதி,**
**(வைத்தீஸ்வரா சந்தி)**
**யாழ்ப்பாணம்.**

(cs.20578) (2.6)

# 31 ஆம் நாள்

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த (05.08.2022) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி



# அமரர் கமலா சண்முகநாதன்

**(சண்முகம் அன் சன்ஸ் உரிமையாளரின் மனைவி)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (02.09.2022) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்திய கிரியைகள் 04.09.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு
அன்புடன் அழைக்கின்றோம்

**தாமோதரம்பிள்ளை வீதி,**
**சங்கத்தானை,**
**சாவகச்சேரி**

**குடும்பத்தினர்**
**077 131 0987**

(cr.8695) (2.6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# VACANCIES

A well reputed educational firm is looking for the positions below

**GENERAL MANAGER**

Degree / Diploma / Experience

Highly active and having good leadership skills

Target oriented and committed to achieving goals set by the organization.

**MARKETING EXECUTIVE**

Degree / Diploma / Experience

Highly active and having good communication skills

Target oriented and committed to achieving goals set by the organization.

**RECEPTIONIST (Female)**

An Attractive person with exceptional communication and persuasive skills

Sound background educational qualification

Interested persons are requested to submit full CV and supporting documents.

highereducation79@gmail.com

0771275204 / 0771148894

Very attractive remuneration will be provided to the right candidate.

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 03 . 1939



மறைவு 30 . 08 . 2022

## அமரர் பொன்னையா சிவலிங்கம்

(ஓய்வு நிலை அதிபர்)

வேலணை வடக்கு 5ஆம் வட்டாரம் சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது 66/14, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சிவலிங்கம் கடந்த (30.08.2022) செவ்வாய்க்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா (ஓய்வுபெற்ற அதிபர்)-இலகம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான க.சி. மயில்வாகனம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் அமிர்தினி (கனடா), அரவிந்தன் (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தரூபன் (கனடா), லக்ஷிகா (UK) ஆகியோரின் மாமனாரும் கமலாதேவி (கனடா), மகாலிங்கம் (ஓய்வுநிலை அதிபர், கொழும்பு), பஞ்சலிங்கம் (கனடா), சோதிலிங்கம் (U.K), ஜெயராணி (கனடா) ஆகியோரின் சகோதரரும், சரஸ்வதி (U.K), சிவம், யோகேஸ்வரி (ஓய்வுபெற்ற தபாலதிபர்), திருநாவுக்கரசு, காலஞ்சென்ற கமலாதேவி (மீனா), லலி, ஜெயகௌரி, அருணகிரிநாதன் ஆகியோரின் மைத்துனரும், இராமச்சந்திரன், இந்திரா, கணேசமூர்த்தி ஆகியோரின் சகலனும் றிவ்வியா, றிசாந், ஆரவி, அர்ஜின், அமயா, லயா, காயா, ஆயன் ஆகியோரின் அன்புப் பேரனும் மாதுமையாள், மதுரன், சுமங்கலா, குகப்பிரியன், கௌசல்யா, நிரூயன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், தனுஷா, ஹம்ஷா, ஜெசிகீசன், சரண்யா, சயானி ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2022) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**66/14, இந்து மகளிர் ஒழுங்கை,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 1620,**
**077 593 9777**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 . 07 . 1954



உதிர்வு 11 . 09 . 2021

## அமரர் பொன்னையா கருணாகரன்

அன்பின் திருவுருவே
பாசத்தின் பாசறையே
நேசத்தின் நிறைவிடமே
ஆண்டுகள் பல கடந்தாலும்
நிலைக்கும் உங்கள் நினைவுகள்.

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவுதின நிகழ்வு இன்று (01.09.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கந்தரோடை மேற்கு,**
**சுன்னாகம்.**
**076 739 0763**

(cs46297) (2.6)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**மனைவி, பிள்ளைகள்.**

## கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்
## 1AB, 1C பாடசாலைகளுக்குரிய அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கீழ்க்குறிப்பிடப்படும் வலயக் கல்வி அலுவலகங்களில் உள்ள 1AB, 1C பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் வடமாகாண கல்வி அமைச்சினால் கோரப்படுகின்றன.

இப்பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபஉ சேவை வகுப்பு 1 மற்றும் வகுப்பு 2 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் வலயக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் 2022.09.14 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக **"செயலாளர், கல்வி அமைச்சு, வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்."** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 03 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
2. இலங்கை அதிபர் சேவை 1 இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலங்கை அதிபர் சேவை 2 ஐச் சேர்ந்தவர்களில் தெரிவு மேற்கொள்ளப்படும்.
3. தற்போது கடமையாற்றும் பாடசாலையில் (1AB, 1C) அதிபராக 03 வருட காலம் சேவையை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
4. மாகாணக் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட "அதிபர் வெற்றிடம் நிரப்புதல்" சுற்றுநிருப இல 2022/ 01 இற்கு அமைய தெரிவு மேற்கொள்ளப்படும்.

கல்வி அமைச்சின் நேர்முகத் தேர்வுச் சபையின் நேர்முகப்பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்பட்டு, சேவை நிலையம் வழங்கப்படும். மேற்படி தெரிவு செய்தல் தொடர்பாக வட மாகாணக் கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும்.

### விண்ணப்பம் கோரப்படும் பாடசாலைகள்

| இல | வலயக் கல்வி அலுவலகம் | பாடசாலை | பாடசாலை வகை |
|---|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | யா/இடைக்காடு மகா வித்தியாலயம் | 1AB |
| 02 | வலிகாமம் | யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் | 1C |
| 03 | மன்னார் | மன்/உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை | 1C |
| 04 | | மன்/அல்மினா மகா வித்தியாலயம் | 1AB |
| 05 | மடு | மன்/ஆண்டாங்குளம் றோ.க.த.க.பாடசாலை | 1C |
| 06 | கிளிநொச்சி தெற்கு | கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் | 1C |
| 07 | முல்லைத்தீவு | மு/விசுவமடு மகா வித்தியாலயம் | 1AB |
| 08 | வவுனியா வடக்கு | வ/ஒலுமடு மகா வித்தியாலயம் | 1C |

**இ.வரதீஸ்வரன்**
**செயலாளர்**

**2022.09.01**

(எ 37964) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
24 . 08 . 1936

மறைவு
12 . 09 . 2021

அமரர் **தையல்நாயகி கந்தசாமி (அழகு)**

எங்கள் அன்பு அம்மா நீங்கள்
எங்களை பிரிந்து ஓர் ஆண்டு
கழிந்தாலும் ஓவியமாய் பதிந்து
இருக்கின்றது உங்கள் ஞாபகம்
காவியமாய் வாழ்ந்தீர்கள் உங்களை
காலமெல்லாம் நினைத்திருப்போம்
தேன் இனிய உங்கள் குணம்
தேடி நாம் உருகுகின்றோம்
ஆண்டவன் காலடியில் உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.



## 1ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தெய்வத்திரு.
**சாமுவேல் தேவபாலன் அழகையா**
(இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்)

தோற்றம் : 20.09.1936 மறைவு : 11.09.2021
திதி: 01.09.2022 - வியாழக்கிழமை
ஆவணி வளர்பிறை

அளவையூரின் நேர் கொண்ட தலைவனாய்
வளம்மிகு வாழ்க்கையை முறையோடு போற்றி
உளம் நிறை மதிப்புடன் உறைந்த தந்தை....
உங்கள் உயர்வைப் போலவே உள்ளமும் உயர்ந்து
மீண்டொரு முறை உங்கள் மதி முகம் காண...
விரைந்து காண்போமா?
என மனம் ஏங்குது தந்தையே!!
ஆண்டொன்று கடந்தாலும் ஆறிடுமோ
உங்கள் நினைவுகள் தந்தையே...
எங்கள் அகமோ ஏற்கவில்லை
நீங்கள் இல்லையென்று
கல்வியின் துணை புகழ்ந்திட உயர்வழி உரைத்தவரே...
அதன் வழி சென்றுயர்நிலையடைந்து
உங்கள் பெயர் ஏற்றி வைப்போம்...
உங்கள் நினைவினை எங்கள் உயிரினில்
எழுதி அவனியில் வாழ்ந்து நிற்போம்.....
உங்கள் நினைவுத்துளிகள் விழிகளின் ஓரம்
கண்ணீராய் கரைகிறது தந்தையே...

இல. 651, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
0776043042,
0776621660.

நினைவில் வாடும்,
குடும்பத்தினர்.


# கற்பக விநாயகர் அலங்காரஉற்சவம்

யாழ்ப்பாணம், செப். 1

வண்ணை சாந்தையர்மடம் கற்பக விநாயகர் அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடந்து 17 நாள்கள் நடைபெறவுள்ளது. மாலை 5.30 மணிக்கு நடைபெறும் அபிஷேகத்தைத் தொடர்ந்து மாலைப் பூசையும் அடுத்து வசந்த மண்டபப் பூசையும் நடைபெற்று இரவு 7.30 மணிக்கு பெருமான் உள்வீதியுலா வருதலும் நடைபெறவுள்ளது. (ம-14)

திருமலை ...

மிலிந்த மொரகொட தெரிவித்தார்.

புதுடில்லியில் வைத்து அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-இலங்கை மண்ணோ அல்லது கடற் பிராந்தியமோ இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக பயன்படுத்தப்படுவதை இலங்கை அனுமதிக்காது. 1987ஆம் ஆண்டு இந்தியாவுக்கு இலங்கை இந்த உறுதி மொழியை அளித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கான முயற்சிகளுக்கு இந்தியா 'தார்க்கரீதியான பங்காளி'. இதில் இடைக்கால நிதி மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் முதலீடுகளைப் பெறுவதற்கான முயற்சிகள் அடங்கும். கடந்த எட்டு அல்லது ஒன்பது மாதங்களில் ஒவ்வொரு திருப்பத்திலும் இந்தியா உண்மையில் இலங்கைக்கு ஆதரவளித்துள்ளது. இந்தியா இல்லையென்றால் இலங்கை, கடுமையான பிரச்சினையை எதிர்நோக்கியிருக்கும். எனவே இலங்கையர்கள் இந்தியாவுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இந்தியா 3.8 பில்லியன் டொலர் மதிப்பிலான உதவிகளை இலங்கைக்கு வழங்கியது. எனினும் இலங்கைக்கு கடினமான காலங்கள் இன்னும் முடிவடையவில்லை - என்றார். (ஒ-இ)

# யாழ்.மாவட்ட பண்பாட்டு விழா சஞ்சிகைக்கான ஆக்கம் கோரல்

யாழ்ப்பாணம், செப்.1

யாழ். மாவட்ட பண்பாட்டுப் பேரவையால் பண்பாட்டு விழா எதிர்வரும் மாதம் ஒக்ரோபர் முதலாம் வாரம் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் வெளியீடு செய்யப்படும் மலருக்கு, 'யாழ்ப்பாணத்து வாழ்வியலும் பண்பாடும்' என்ற கருப்பொருளில் விடயங்களை உள்ளடக்கியதாக ஆக்கங்களை 5 பக்கங்களுக்கு மேற்படாது பிரதியெடுத்து, நேரடியாகவோ அல்லது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஊடாகவோ எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் 'தலைவர், மாவட்டப் பண்பாட்டுப் பேரவை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ய-20)


## இலவச ஆங்கில கணினி வகுப்புக்கள்

பிரிவு 41

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

- Diploma in English
- Diploma in ICT
- Diploma in Singalam
- Diploma in Political Science
- Diploma in Psychology & Counselling

ஆரம்பம் : 02,03,04 /09/2022 10.00 AM

● காலம் : 03 மாதங்கள் ● சான்றிதழ் பிரிவுகள்

குறிப்பு: க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றி பெறுபேறு பெற்ற மாணவர்கள் இணைந்துகொள்ள முடியும்

IPS To Your Future
திருநெல்வேலி

021 424 0229
076 685 2529



## மரண அறிவித்தல்



**அமரர் அன்னரெட்ணம் செல்வமணி**

நுணாவில் கிழக்கு கல்வயல் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் அன்னரெட்ணம் செல்வமணி அவர்கள் கடந்த (29.08.2022) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா ரெட்ணம் தம்பதியரின் அன்பு மகளும், சின்னையா அன்னரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், சின்னையா செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வரெட்ணம் (ஜேர்மனி), செல்வகுமார், செல்வன் (துக்காளி) ஆகியோரின் அன்புத் தாயாரும் அனு (ஜேர்மனி), அகிலா ஆகியோரின் அன்பு தாயாரும் அனு (ஜேர்மனி), அகிலா ஆகியோரின் அன்பு மாமியாரும் ரபிக்கா, ரிஷான், ரேனுயன், அபிஷா, அட்ஷயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அமரர் தங்கராசா, அமரர் ஞானதேவி, அமரர் ஜெயக்குமார், பாராசக்தி (ராணி), கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரி, அமரர் சுப்பிரமணியம், யோகநாதன், வாசுகி, ரதினா, விஜி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் - செல்வன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைக்கு வேலையாள் தேவை

சாவகச்சேரி நகரிலுள்ள பாதணி, புடவை நிலையத்திற்கு 18 - 25 வயதுடைய ஆண் / பெண் வேலையாள் தேவை. பழக ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும். தென்மராச்சி நகரை அண்டியுள்ளவர்கள் விரும்பத்தக்கது. ஆர்வம் இருப்பின் பெற்றோருடன் வரவும்.

(எ 37965) (2.6)

**077 722 2025, 077 1713163**

## பெயர் மாற்றம்

முதலியார்குளம் செட்டிகுளம் என்னும் முகவரியில் வசிக்கும் **சகுந்தாதேவி கந்தையா** என்னும் பெயரில் எனது பிறப்பு அத்தாட்சி பத்திரத்தில் (5401) உள்ளது இதனை இன்று தொடக்கம் **சகுந்தலா சின்னையா** என மாற்றம் செய்துள்ளேன் என்றும் இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசுக்கு அமைவாக மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs 43172) (2.6) **சகுந்தலா**

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 - 04 - 1934



மறைவு 31 - 08 - 2022

### கந்தசாமி சின்னப்பிள்ளை

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி பெருங்குளம் வீதியை வதிவிடமாகக் கொண்ட கந்தசாமி சின்னப்பிள்ளை நேற்று (31.08.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமியின் அன்பு மனைவியும் விஜயகுமாரன், விஜயகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயதீஸ்வரி, ஞானசுந்தரம் ஆகியோரின் மாமியாரும் கிரிசாந்தன், ஆதிரை, கதிரவன், கம்சிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2022) வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெருங்குளம் சந்தி,**
**சங்கத்தானை வீதி, சாவகச்சேரி**

**தகவல்:**
**மகன் குடும்பம்**
**மகள் குடும்பம்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 10 . 1948



மறைவு 29 . 08 . 2022

### திரு. சின்னத்துரை மகிமைசேனன்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.சின்னத்துரை மகிமைசேனன் கடந்த (29.08.2022) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை யோகம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், இராசையா (காலஞ்சென்ற), மகேஸ்வரி ஆகியோரின் மூத்த மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், பதுமசேனா (காலஞ்சென்ற), கருணசேனன், சமரசேனன், யோகசேனன், ஸ்ரீகலாசேனை, அருட்கலாசேனன், தயாட்சனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரபசேனன், கிருபசேனன், கஜேந்திரசேனன், திஸானி, தனுஜியா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெசிந்தன், மயூரி, ஜசிந்தா, லோசனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சர்விகா, தேதவ்சேனன், கிருணிகா ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், திஜெனி, ஜெய்சரண் ஆகியோரின் அன்பு அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 075 9493**

## மரண அறிவித்தல்


### பொன்னம்பலம் அருளம்பலம் (குஞ்சு மாமா)

பளையை பிறப்பிடமாகவும் இல.91 பாலிநகர் வவுனிக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் அருளம்பலம் (குஞ்சுமாமா) நேற்று (31.08.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் பொன்னையா கதிராசப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சிறீரஞ்சினியின் அன்புக் கணவரும் கவிதா (ஜேர்மனி), பிரபாகரன் (பிரசன்னா), அனித்தா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நகுலேஸ்வரன் (வாத்தி-ஜேர்மனி), சத்தியசீலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் இராசம்மா (ஜேர்மனி), சிவக்கொழுந்து (லண்டன்), செல்லம்மா, லோகு(அமரர்), செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசையா (அமரர்), தம்பையா, சுபத்திரா, சிவபாலு, சந்திரகுமார்,சூரியகுமார், மகாலிங்கம்(அமரர்), லோகேந்திரன், நடராஜா (அமரர்) ஆகியோரின் மைத்துனரும் இளையராஜா, சந்திரகுமார், ஏகாம்பரநாதன், பேரின்பநாதன், ஸ்ரீவள்ளி, மணிவண்ணன், கலைச்செல்வி, ரவீந்திரநாதன், மஞ்சுளா, சாந்தினி, இந்திரன், நாகேஸ்வரன் (ராசன்-நோர்வே), நிர்மலி, தர்சன், தயாபரன், கிருபாநிதி, கிருபாகரன், கிருபாரஞ்சினி, ரமேஸ்கரன், டினேஸ்கரன் ஆகியோரின் மாமனாரும் சட்சனா, சுதன், சாந்தி ஆகியோரின் சிறிய தந்தையும் யனுசன் (ஜேர்மனி), யாவர்த்தனன் (ஜேர்மனி), அட்சயா (கனடா), அட்சரா (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2022) வியாழக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பாலியாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சிறீரஞ்சினி (மனைவி) - 076 921 3651**
**சிறீவள்ளி (மருமகள்) - 077 459 1349**



பிறப்பு 03.07.1952

இறப்பு 31.08.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையே ஊசலாடும் குடும்பங்கள்!

### காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகள் தொடர்பில் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி வேதனை

கொழும்பு, செப். 1

இலங்கையில் காணாமற்போன பலரின் குடும்பங்கள் 'தமது உறவுகள் எங்கே? 'என்ற கேள்விக்கான பதிலையே கோருகின்றன. அதற்குரிய பதிலின்றி அவர்கள் தினமும் துன்பப்படுவதுடன் நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையில் அல்லாடுகின்றார்கள் =என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி காணாமற்போனோருக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கண்டறிவதற்கும், பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீட்டை வழங்குவதற்கும், குற்றவாளிகளை சட்டத்தின் முன்நிறுத்துவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

நான் இலங்கையில் காணாமற்போன பலரின் குடும்பங்களைச் சந்தித்திருக்கின்றேன். தங்கள் அன்புக்குரியவர்களின் இருப்பின் நிலையற்றதன்மையானது அவர்கள் மத்தியில் இன்னமும் ஆறாத. வலிமிகுந்த காயமாகவே இருந்து வருகின்றது.

தமது உறவுகள் எங்கே? என்ற கேள்விக்கான பதிலையே அவர்கள் கோருகின்றார்கள். அதற்குரிய பதிலின்றி அவர்கள் தினமும் துன்பப்படுவதுடன் நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையில் அல்லாடுகின்றார்கள். உண்மையையும் நீதியையும் கோரிய போராட்டத்துக்கு மத்தியில் அவர்கள் அவ்வப்போது வெகுவாகப் பாதிப்படைந்திருக்கின்றார்கள்.

காணாமற்போனோர் பற்றிய அலுவலகம் உருவாக்கப்பட்டமையானது ,சரியான பாதையில் வைக்கப்பட்ட அடுத்தகட்ட நகர்வு . காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்துக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் மற்றும் காணாமற்போனோரின் விவரங்கள் என்பன வெளியிடப்பட்டமையானது மிகவும் பயனுடையதோர் அடிப்படையாகும்.

இருப்பினும் காணாமற்போனோரின் குடும்பங்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு இன்னும் பல விடயங்களைச் செய்யவேண்டியிருப்பதுடன் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக அவர்களது பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு நம்பகத்தன்மைவாய்ந்த செயன்முறையொன்றை முன்வைக்க வேண்டும்-என்றுள்ளது.

அதேவேளை- இதுகுறித்து இலங்கையிலுள்ள பிரிட்டன் தூதரகம் நேற்று முன் தினம் அதன் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில், வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமான இன்று (ஓகஸ்ட் 30) இல், அண்மையில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் மூலம் 2 ஆயிரம் நாள்களைப் பூர்த்திசெய்த வடக்கு-கிழக்கில் வாழும் குடும்பங்கள் உள்ளடங்கலாக நாடளாவிய ரீதியிலுள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துகின்றோம். தமது அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கு அனைத்து சமூகங்களும் கொண்டிருக்கும் உரிமைக்கு மதிப்பளிக்கப்படவேண்டும்' என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

# மீண்டும் சூடு!

கொழும்பு, செப். 1

நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு முன்பாக நேற்று துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது. இருவர் இதன்போது காயமடைந்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக தென்பகுதியில் தொடர்ச்சியாக துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதுவரையில் 30 பேர் இதன் காரணமாக உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

# சாவுத் தண்டனை நிறைவேற்றப்படாது

### கையெழுத்திடமாட்டேன் என்கிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, செப். 1

சாவுத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு ஒருபோதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிடப் போவதில்லை என்று சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்துக்கு நேற்று அறிவித்துள்ளார். 2019 ஆம் ஆண்டு சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் நால்வரின் தண்டனையை நிறைவேற்றுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்யுமாறு தாக்கல் செய்யப்பட்ட பல அடிப்படை உரிமை மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ-ஒ-இ)

### இலங்கைக்கு...

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வு அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது. இதனை முன்னிட்டு தமிழர் தரப்பு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அந்தக் கடிதத்தில் பிரதானமாக, சர்வதேச நீதிமன்றத்துக்கு இலங்கையைப் பாரப்படுத்த ஐ.நா. பாதுகாப்புச் சபையைத் தூண்டுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட வந்த பிரேரணைகளை இலங்கை நடைமுறைப்படுத்த தவறி உள்ளமையால், மேலும் கால அவகாசத்தை வழங்குவது அர்த்தமற்றது என்று குறிப்பிடப்பட் டுள்ளது.

பாதுகாப்புச் சபையில் சீனா தன்னுடைய வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி சர்வதேச நீதிமன்றத்துக்கு இலங்கையைப் பாரப்படுத்துவதை தடுக்கும் என்ற வாதம் குற்றவாளிகளை தப்பிக்க வைக்கும் முயற்சியா? என்று உலகின் பல தரப்பினரும் சந்தேகத்தை எழுப்புவதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

இந்தக் கருத்துக்கள் ஆதாரமற்றவை என்றும், இலங்கையை விட சீனாவோடு மிக நெருக்கமாக இருந்த சூடானை ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஊடாக மனித உரிமை மீறல்களுக்காக சர்வதேச நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்திய பொழுது அதற்கு எதிராக எந்த நாடும் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தவில்லை என்பதும், அதேபோன்று வடகொரியாவை சர்வதேச நீதிமன்றத்துக்கு பாரப்படுத்துவதற்காக ஐ.நா. பாதுகாப்பு சபையில் சமர்ப்பிக்கப்பட்டு இருப்பதையும் இந்தக் கடிதம் சுட்டிக் காட்டியுள்ளது.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் அட்டூழியக் குற்றங்களுக்காக நீண்டகாலமாக தமிழ் மக்கள் கோரி நிற்கும் நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு மனித உரிமைகள் பேரவை மேற்குறிப்பிட்ட உண்மைகளின் அடிப்படையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையை பாரப்படுத்துவதற்கு பாதுகாப்புச் சபையை தூண்டுவதற்கான பிரேரணையை நிறைவேற்ற வேண்டும் எனவும் இந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

கடந்த 28 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், யாழ். தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், அம்பாறை தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா, வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அ.விஜயகுமார், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், நல்லை ஆதீன குரு முதல்வர், திருகோணமலை தென்கயிலை ஆதீன முதல்வர், திருகோணமலை மறை மாவட்ட ஆயர், பொ-பொ மக்கள் எழுச்சி இயக்கத்தின் ஏற்பாட்டாளர் வேலன் சுவாமிகள், யாழ். மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாசங்களின் தலைவர் அ.அன்னராசா, வடக்கு -கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி திருமதி வை.கனகரஞ்சினி, குரலற்றவர்களின் குரல் அமைப்பின் அமைப்பாளர் மு.கோமகன், வவுனியா மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அமைப்பு ஆகியோர் கையெழுத்திட்டுள்ளதுடன் யாழ்.மறை மாவட்ட ஆயர் இந்தக் கடிதத்துக்கு தனது இணக்கத்தை வெளியிட்டுள்ளார். (அ-ஒ,5)

# தினமும் 3 ,000 மெ.தொ. பெற்றோல் !

### வரிசைகள் முடிவுக்கு என்கிறார் அமைச்சர்

கொழும்பு, செப். 1

5 ஆயிரம் மெற்றிக் தொன் ஒக்ரேன் 92 பெற்றோலை ஏற்றி வந்த கப்பலிலிருந்து, பெற்றோலை இறக்கும் பணி நேற்றுமுன்தினம் இரவு ஆரம்பிக்கப்பட்டதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். இதனால் எரிபொருள் விநியோகம் தொடர்பில் கடந்த சில நாள்களாக நிலவி வந்த நெரிசல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், நாளொன்றுக்கு 4 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் மற்றும் 3 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)

### நாடுமுழுவதும்...

மலைநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆறுகள் பெருக்கெடுத்துள்ளன. அத்துடன் பல்வேறு பகுதிகளில் மண்சரிவு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. சில பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதேவேளை, நிலவிவரும் மழையுடனான வானிலையால் நாட்டில் வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ள பகுதிகளுக்கு மீட்புப் பணிக்குச் செல்ல சிறிலங்கா வான்படை தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,இ)

### ஜெனிவா...

தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்தபோதே இந்த அறிவிப்பை விடுத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் கூறுகையில்;

இலங்கைக்கு எதிராக சர்வதேசத்தில் பெரிய பிரச்சினைகள் உள்ளன. இவ்வாறான நிலையில் நாடு தற்போதும் மிகப் பெரும் அபாய நிலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. இந்த மாதம் ஜெனிவாவில் இலங்கைக்குப் பெரிய நெருக்கடிகள் காத்திருக்கின்றன. ஜெனிவா நெருக்கடிகளைப் பொறுத்தவரையில் நாம் அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் சார்பாகவே செயற்படுவோம்.

நாம் மற்றவர்களைப்போன்று பெட்டிகளுடன் ஜெனிவாவுக்குச் செல்ல மாட்டோம். எமது நாட்டைப் பற்றி ஒருபோதும் வெளிநாடுகளுக்குப் புறம் சொல்லவோ முறையிடவோ மாட்டோம். நாட்டுக்காகவே செயற்படுவோம்- என்றார். (ஒ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2 பில்லியன்...*

ருத்தி வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் நிதியை மீள் திட்டமிடல் மூலம் இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்படக்கூடிய மற்றும் ஏழைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், உணவுப் பாதுகாப்பை அதிகரிக்கவும் இந்தக் கடன் பயன்படுத்தப்படும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

*புலிகளின்...*

ஏதுமிருக்கவில்லை எனவும் ஆனால், மண்ணெண்ணெய் மணல் தாங்கியில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 10 ஆம் வட்டாரத்திலுள்ள தனியார் காணியிலிருந்தே இந்த எரிபொருள் தாங்கி நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக மீட்கப்பட்டது. எரிபொருள் நிரப்பிய தாங்கி காணியொன்றினுள் இருப்பதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவின் அனுமதியுடன் அதனைத் தோண்டும் நடவடிக்கை நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது பெரிய எரிபொருள் தாங்கியொன்று எரிபொருள் ஏதும் இல்லாத நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

அந்தத் தாங்கி அமைந்திருந்த நிலப் பகுதியில் ஏற்கனவே மூன்று இடங்களில் தோண்டப்பட்டுள்ளன. இதன் காரணமாக தாங்கியில் இரு இடங்களில் ஓட்டைகள் ஏற்பட்டுள்ளன. குறித்த ஓட்டைகளைப் பயன்படுத்தி அந்தத் தாங்கியிலிருந்த எண்ணெய் களவாடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் இதன் காரணமாக ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எரிபொருள் தாங்கியில் ஓட்டை ஏற்பட்டுள்ள இடத்தில் முகர்ந்து பார்த்தபோது மண்ணெண்ணெய் வாசனையடித்ததாகவும் கூறப்படுகின்றது. எரிபொருள் தாங்கியை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் பாதுகாக்குமாறும் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுக்குமாறும் நீதிபதி பணித்துள்ளார். (அ-ஒ-19)

*காகத்தின்...*

ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

குயிலுக்கு கூடு கட்ட முடியாது. அது காகத்தின் கூட்டில் முட்டையிடுகிறது. காகமும், குயிலின் முட்டையை பிரித்தறியத் தெரியாமல் இருக்கும் நிலையில், குயில் குஞ்சும் அந்த கூட்டிலேயே உருவாக்கம் பெறுகிறது. எனினும் குறிப்பிட்ட காலம் வரும்போது குயில் குஞ்சை அடையாளம்காணும் காகம். அதனை கூட்டில் இருந்து விரட்டி விடுகிறது. இதனைப்போன்றே ரணில் விக்கிரமசிங்கவின் யோசனையும், காகத்தின் கூட்டில் இட்ட குயிலின் முட்டையை போன்று நிராகரிக்கப்படும் என்று ஹர்ஷ குறிப்பிட்டார்.

இதேவேளை- கடந்த மாதத்தில் உணவுப்பணவீக்கம் 80 வீதமாக இருந்தநிலையில், இந்த மாதத்துக்கான உணவுப் பணவீக்கம் 100 வீதத்தை நெருங்கலாம் என்று ஹர்ஷ எதிர்வுகூறலை வெளியிட்டார்.

2021ஆம் ஆண்டு ஒரு லட்சம் ரூபாவை சேமித்த ஒருவருக்கு இன்று அந்த சேமிப்பின் மதிப்பு 30 ஆயிரமாக குறைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். இந்தநிலையில் பொதுமக்களின் சேமிப்பில் 70 வீதத்தை ராஜபக்சக்கள் கொள்ளையடித்துள்ளார்கள் என்றும் ஹர்ஷ தெரிவித்தார். (அ-ஒ-இ)

*பயங்கரவாதத்...*

குணவர்த்தன மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

'போராட்டக்காரர்களுக்கு எதிராக அரசு, அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டது. மக்களின் அரசியல் உரிமைகள், கருத்து வெளியிடும் உரிமைகள் பறிக்கப்பட்டதா?' என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி எழுப்பினார். அரசாங்கம் , கைது செய்யப்பட்ட மாணவர்கள் மீது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்காது. ஆனாலும், பொதுச் சட்டங்களின் கீழ் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் கூறினார்.

இதேவேளை- கைது செய்யப்பட்ட 28 பேரும், மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது அவர்களை பிணையில் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டார். "கோத்தா கோ கம" போராட்டக்காரர்கள் மூவரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைக்கு சர்வதேச சமூகத்திடமிருந்து கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் இந்த மாதம் ஆரம்பமாகும் ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்விலும் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையிலேயே அரசாங்கம் மேற்கண்டவாறு தனது நிலைப்பாட்டை மாற்றியுள்ளது. (அ-ஒ-5)

*இரண்டாம்...*

அறிவித்துள்ளது. எதிர்வரும் 8 ஆம் திகதி (வியாழக்கிழமை) முதல் 12 ஆம் திகதி (திங்கட்கிழமை) வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது. புதிய தவணைக்கான கற்பித்தல் செயற்பாடுகள் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளன. (அ-ஒ-இ)

*15 இல்....*

வித்துள்ளது. உலகிலுள்ள செல்வந்த நாடுகளில் இருப்பதைப் போன்ற பொழுதுபோக்கு மற்றும் புதிய தொழில்நுட்ப வசதிகளை வழங்க திட்டமிட்டிருப்பதாக கொழும்பு தாமரைக் கோபுர தனியார் நிறுவனத்தின் பிரதம நிர்வாக அதிகாரி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதுவரை 80 சதவீதமான உள்நாட்டு முதலீட்டாளர்களும் 20 சதவீதமான வெளிநாட்டு முதலீட்டாளர்களும் தாமரை கோபுரத்தில் முதலீடு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'டயலொக் நிறுவனம் மற்றும் சிறிலங்கா ரெலிகொம் நிறுவனம் என்பன தலா 200 மில்லியன் ரூபா முதலீடு செய்வதற்கு ஒப்பந்தம் செய்துள்ளன. தாமரைக்கோபுரத்தைப் பார்வையிடுவதற்கான நுழைவுச் சீட்டொன்றின் விலை 500 ரூபா என்பதோடு விசேட நுழைவுச் சீட்டின் விலை 2 ஆயிரம் ரூபாவாகும். பார்வையிட வரும் வெளிநாட்டவர் ஒருவருக்கான நுழைவுச் சீட்டு 20 அமெரிக்க டொலர். இதுவரை 58 முதலீட்டாளர்களுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. அதில் 22 பேர் ஒப்பந்தம் மேற்கொள்ள இணங்கியுள்ளனர். 15 பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுக்காக எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதி வரை தாமரைக் கோபுரம் முன்பதிவு செய்யப்பட்டுள்ளது.

தாமரை கோபுரத்துக்கு வரும் பொதுமக்களுக்காக தரைத்தளம், பிரபலமான உணவகங்கள், பஃப் மற்றும் நினைவுப்பரிசு அங்காடிகள் என்பவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதோடு, பல முன்னணி வணிக வங்கிக் கிளைகளையும் தரைத்தளத்தில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் தளம் , அலுவலக வசதிகளுக்காக பயன்படுத்தப்படுவதுடன் டிஜிற்றல் சினிமா அனுபவத்தைப் பெறவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மூன்றாவது தளத்திலுள்ள மாநாட்டு மண்டபம், ஒரே நேரத்தில் சுமார் 400 பேருக்கான இருக்கை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், திறந்த தளம் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய தொழில்நுட்பத்தின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ள இலங்கையில் உள்ள மிகவேகமாக இயங்கக் கூடிய மூன்று மின் தூக்கிகள் (லிப்ட்) தாமரைக் கோபுரத்தில் பொருத்தப்பட்டுள்ளன' என்றும் அவர் தெரிவித்தார். (அ-ஒ-இ)

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில்**
**06 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- கைதடி சந்தியிலிருந்து 750 M தூத்தில்
- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- 20 அடிப் பாதையுடன்

**076 7558 606**

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

**விற்பனைக்கு**

WagonR - Sting ray 2018
விற்பனைக்குண்டு
**077 757 1717**

**விற்பனைக்கு**

Mahindra Bolero 4x4 (2017 - DAF)
உடன் விற்பனைக்குண்டு
**077 757 1717**

**உணவகமொன்றிற்கு வேலையாட்கள் தேவை**

சமையல் உதவியாளர்,
உணவு பரிமாறுபவர் தேவை
**077 5073 484**

**வீடு வாடகைக்கு தேவை**

சிறிய குடும்பத்திற்கு யாழ்நகர், நல்லூர் பிரதேசத்திற்குட்பட்ட இடங்களில் வீடு வாடகைக்கு தேவை.
**077 087 6729**

**பணியாளர்கள் தேவை**

பிரபல கம்பனியின்
**பிளாஸ்டிக்**
**உற்பத்திப் பொருள்கள்**
**விற்பனைக்கு** முன் அனுபமுள்ள

- **முகாமையாளர்**
- **விற்பனை பிரதிநிதிகள்**
- **கணக்காளர்கள்**
- **உதவிப்பணியாளர்கள்**

ஆண், பெண் தேவை.
விண்ணப்பிக்க.

விளம்பர இல.JF/1040
C/O உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 42 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- நான்கு பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபர்ப்பு) விலை இரண்டு இலட்சம் 200,000/= மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: **076 755 8606**
**077 911 6983**

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் புத்தூரில் 150 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி .
- 775 இலக்க வழி பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
  விவசாயம் செய்வதற்கும், வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் (1 நிலபரப்பு) விலை இரண்டு இலட்சம் (200,000) மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: **077 6585 999**
**076 4385 814**
**077 8748 135**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.